# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.
# அசல் வழக்கு எண். 205/2024

பெயர் : ஜெயம்மாள் நாள் : 10.06.2026

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணை சாட்சியத்தில் நான் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். 2ம் வாதி எனது தாயார் ஆவார். பிரதிவாதி எனது அண்ணனின் மனைவி என்றால் சரிதான். நான் சாமியாத்தாள், பழனிசாமியின் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். சாமியாத்தாள், பழனிசாமியின் எத்தனை வாரிசுகள் என்றால் ஜெயம்மாள், தங்கராஜ், சேகர் ஆகியோர்கள் ஆவார்கள். தங்கராஜின் மனைவி தான் பிரதிவாதி என்றால் சரிதான். வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் என் அப்பா சொத்தில் பங்குவேண்டும் என்ற கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சேகர் என்ற எனது தம்பி சிறுவயதிலேயே காணாமல் போனவர் இன்றுவரை வரவில்லை என்றால் சரிதான். காணாமல் போன எனது தம்பியை கண்டுபிடிப்பதற்காக நானோ, 2வது வாதியோ முயற்சி எடுக்கவில்லை என்றால் எடுத்தோம், ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

2. எனது தம்பியை கண்டுபிடித்து தருமாறு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. ஆனால் உயிருடன் உள்ளதா தெரிந்தவர்கள் சொன்னார்கள். எங்கு இருப்பதாக சொன்னார்கள் என்றால் திருப்பூர் என்ற ஊரில் இருப்பதாக சொன்னார்கள். தாவா சொத்து எனது தந்தை பழனிசாமிக்கு சொந்தமானது என்றால் சரிதான். என் அப்பா பழனிசாமியுடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் அப்பா மற்றும் ஒரு அத்தை உள்ளார். அத்தை இறந்துவிட்டார். என் அத்தைக்கு 2 மகள்கள் உள்ளார்கள். என்தாத்தாவின் சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான். என் அப்பாவிற்கும், எனது அத்தைக்கும் பாகம் செய்து கொண்டார்களா என்றால் இல்லை.

3. எனது புகாரிலும், முதல் விசாரணையிலும் என் தாத்தாவின் சொத்தை என் அப்பாவும், அத்தையும் பாகம் பிரித்து கொண்டார்கள் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் தவறு தான். எனது அண்ணன் தங்கராஜ்-க்கும் பிரதிவாதிக்கும் எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. திருமணத்திற்கு பின்னிட்டு எனது அண்ணன் தங்கராஜ்-ம், அண்ணியும் எனது தகப்பனார் இருந்த முகவரியில் தான் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1990, 1991 ம் ஆண்டு வாக்கில் திருமணம் நடந்தது. எனது திருமணத்திற்கு பின்னிட்டு நான் எனது கணவருடன் அவருடைய ஊரான ஓலப்பாளையத்தில் குடியிருந்தோம். தாவா சொத்திற்கும் ஓலப்பாளையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 கிலோமீட்டர் ஆகும். எனது புகாரிலும், முதல் விசாரணையிலும் எனது அண்ணன் 18.01.2010 ம் தேதியன்று இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.10 18:05:40 +0530

4. எனது அண்ணன் உயிருடன் இருந்த காலத்தில் என் அண்ணனும், அண்ணியும் விவாகரத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். கருத்துவேறுபாடு காரணமாக பிரிந்து இருந்தார்கள் என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.10 18:05:44 +0530